# PAPER – II

## LAW

**Note :** Attempt all the questions. Each question carries *two* (2) marks.

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். ஒவ்வொன்றிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள்.

**1.** The new phrases in the preamble viz, "Socialist, Secular" and "Unity and Integrity of the Nation" has been inserted in The Constitution of India by the

1) $24^{th}$ Amendment Act
2) $25^{th}$ Amendment Act
3) $42^{nd}$ Amendment Act
4) $44^{th}$ Amendment Act

"மதச் சார்பின்மை, பொதுவுடைமை", மற்றும் "ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உடைய தேசம்" என்ற வார்த்தைகள் இந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வரப்பட்டது?

1) இருபத்தி நான்காவது சட்டத்திருத்தம்
2) இருபத்தைந்தாவது சட்டத்திருத்தம்
3) நாற்பத்திரண்டாவது சட்டத்திருத்தம்
4) நாற்பத்தி நான்காவது சட்டத்திருத்தம்

**2.** In which case the Supreme Court has said that the preamble to the Constitution is a key to open the mind of the Constitutional makers?

1) Keshavanda Bharathi Vs State of Kerala
2) In Re Berubari case
3) Golaknath Vs State of Punjab
4) S.R.Bommai Vs Union of India

அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையானது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் எண்ணத்தை வெளிப்படுத்தும் திறவுகோளாக உள்ளது என்ற உச்சநீதிமன்றத்தின் வழக்கு?

1) கேசவானந்த பாரதி Vs கேரள மாநிலம்
2) பெருபாரி விவகாரம்
3) கோலக் நாத் Vs பஞ்சாப் மாநிலம்
4) எஸ்.ஆர். பொம்மை Vs ஐக்கிய இந்தியா

**3.** "The Directive Principles of State Policy has to conform to and run subsidiary to the chapter of fundamental rights, because the fundamental rights are enforceable in the court, where as the Directive Principles are not" the Supreme Court so ruled in

1) Mohd.Hanif Qureshi Vs State of Bihar
2) Minerva Mills Vs Union of India
3) State of Madras Vs Champakam Dorairajan
4) Sanjeev Coke mfg.co Vs Bharat cooking coal

அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ள அரசின் கொள்கையை வழிநடத்தும் நெறிமுறைகள் அடிப்படை உரிமைகளுக்கு இணங்கியும் அதற்குட்பட்டும் இருத்தல் வேண்டும். ஏனெனில் அடிப்படை உரிமைகள் நீதிமன்றங்கள் செயலுறுத்தக் கூடியவை. ஆனால் நெறிமுறைகள் அவ்வாறு இல்லை என்று எந்த வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

1) முஹம்மது ஹனாபீ குவரசி Vs பீஹார்
2) மினர்வா மில்ஸ்
3) சென்னை மாநிலம் Vs செண்பகம் துறை ராஜன்
4) சஞ்சீவ் கோக் உற்பத்தியாளர் கம்பெனி Vs பாரத் சமையல் எரிபொருள்

4. Which Article of the Indian Constitution requires the state to protect every monument or place of historic Interest of National Importance?

1) Article 48
2) Article 48-A
3) Article 49
4) Articles 50

கீழ்க்கண்ட அரசியலமைப்பு சட்டப் பிரிவுகளில் எந்த பிரிவின் கீழ் அரசு புராதன சின்னங்கள் மற்றும் சரித்திரம் முக்கியத்துவம் பெற்ற இடங்களை பாதுகாக்க கடன் படுத்தப்பட்டது?

1) ஷரத்து 48
2) ஷரத்து 48-A
3) ஷரத்து 49
4) ஷரத்து 50

5. In which case it was held that a high caste girl marrying Scheduled Tribe was not entitled to the reservation benefit.

1) Meera Kanwaria Vs Surita
2) Anil Kumar Gupta Vs State of U.P
3) Dr. Priti srivatsava Vs State of Madhya Pradesh
4) Dr.Neelima Vs Deen P.G. Studies A.P Agriculture University, Hydrabath

பழங்குடி இனத்தவரை மணக்கும் ஒரு உயர் சாதிப் பெண் இடஒதுக்கீடு நலன் பெற அருகதையற்றவர் என தீர்மானித்த உச்சநீதிமன்ற வழக்கு?

1) மீரா கண்வாரியா
2) அனில்குமார் குப்தா
3) டாக்டர். பிரிதி ஸ்ரீவத்ஸவா
4) டாக்டர். நீலிமா

6. Appointment on Compassionate grounds of a son, daughter, or widow to assist the female to relieve economic distress has been held valid under the Constitution of India vide

1) Articles 16(1) and 16(2)
2) Articles 16(3) and 16(4)
3) Article 15(4)
4) Articles 15(3)

பொருளாதார நொடிப்பு நிலை காரணமாய் கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்குதலை அனுமதிக்கும் அரசியலமைப்பு சட்டவிதிகள்?

1) ஷரத்து 16(1) மற்றும் 16(2)
2) ஷரத்து 16(3) மற்றும் 16(4)
3) ஷரத்து 15(4)
4) ஷரத்து 15(3)

7. A systematic study of law had started from

1) Romans
2) Greeks
3) Europeans
4) Arabs

சட்ட இயல் குறித்த ஆய்வு முதன் முதலாக துவங்கிய நாடு

1) ரோமானியா
2) கிரேக்கம்
3) ஐரோப்பியா
4) அரேபியா

8. According to Hindu legal theory the origin of law is

1) Sruthi 2) Devine
3) Dharma 4) None

இந்து மத சட்டவியல்படி, அந்த மதச் சட்டத்தின் தோற்றமாக கருதப்படுவது

1) ஸ்ருதி 2) இறைமை
3) தர்மா 4) மேற்கூறியவை எதுவுமில்லை

9. Jurisprudence is the study of ———————— law.

1) Religious 2) Ethical
3) Positive 4) Nature and Law

சட்டவியல் என்பது இவை தொடர்பானது.

1) மதம் 2) நெறிகள்
3) நேர்மறை 4) இயற்கை மற்றும் சட்டம்

10. The school of jurisprudence that hypothesize law based on what is correct

1) Sociological 2) Historical
3) Analytical 4) Natural Law

சரி என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டவியல் பள்ளி?

1) சமூகவியல் 2) வரலாற்று முறை
3) பகுத்தாய்வு முறை 4) இயல்பான சட்டம்

11. Which theory of punishment studies the psychology of the criminal considers the punishment as the social end?

1) Preventive theory 2) Deterrent theory
3) Reformative theory 4) Retributive theory

குற்றவாளியின் மனநிலை அறிந்து சமுதாய நோக்கில் தண்டனை விதிக்கப்படுவதாக கருதும் கோட்பாடு?

1) தடுத்தல் கோட்பாடு 2) அச்சுறுத்தல் கோட்பாடு
3) சீர்திருத்த கோட்பாடு 4) பழிக்கு பழி கோட்பாடு

12. When a right is owned by a society at large, it is said to be?

1) Determinate 2) Indeterminate
3) Both (1) and (2) 4) Neither (1) nor (2)

உரிமை சமுதாயத்தில் பொதுவாக அமையும் போது இவ்வாறு அழைக்கப்படுகிறது?

1) அறுதியிட்ட உரிமை 2) அறுதியற்ற உரிமை
3) (1) மற்றும் (2) 4) (1) மற்றும் (2) அல்ல

**13.** Who defined "Every agreement and promise enforceable by law is a Contract"?

1) Pollock
2) Halsbury
3) Salmond
4) Michael Furmston

நிறைவேற்ற வாய்ப்புடைய அனைத்து உடன்படிக்கைகளும் ஒப்பந்தமாக கருதப்படும் என்ற கூற்று இவருடையது?

1) பொல்லாக்
2) ஹால்ஸ்பரி
3) சாலமன்
4) மைக்கேல் பார்ம்ஸ்டோன

**14.** Who cannot enter into a Contract as per Section 11 of the Contract Act?

1) One who is of the age of majority according to the Law
2) One who is of sound mind
3) One who is not disqualified from Contracting by any Law
4) One who is of unsound mind person

ஒப்பந்தச் சட்ட பிரிவு 11-ன் கீழ் ஒப்பந்தம் செய்ய இயலா நபர்

1) சட்டப்படியான வயது உடையவர்
2) சீர் மனநிலை உடையவர்
3) ஒப்பந்த தகுதியிழப்பு பெறாதவர்
4) மனநலம் சரியில்லாதவர்

**15.** The term Revocation means

1) Taking Back
2) To Complete
3) Accepting a Contract
4) Breach of Trust

ரத்து செய்தல் என்பது

1) திரும்ப பெறுதல்
2) முடித்து வைத்தல்
3) ஒப்பந்தத்தை ஏற்றல்
4) பொறுப்புரிமையை மீறுதல்

**16.** The Doctrine of offer and acceptance clearly emerges from the case/cases

1) Adam Vs Lindsell
2) Carhill Vs Carbolic Smoke Ball Co.,
3) Eastwood Vs Kenyon
4) 1, 2 and 3

முனைவு மற்றும் ஏற்பு கோட்பாட்டினை வெளிப்படுத்திய வழக்கு

1) ஏடம் எதிர் லின்ட்ஸெல்
2) கார்லில் எதிர் கார்பாலிக் ஸ்மோக்பால் கம்பெனி
3) ஈஸ்ட் உட் எதிர் கென்யான்
4) 1, 2 மற்றும் 3

**17.** Agreement Enforceable by law is

1) Promise
2) Contract
3) Obligation
4) Proposal

நிறைவேற்ற கூடிய உடன்படிக்கைகள் இவ்வாறு அழைக்கப்படும்

1) உறுதியுரை
2) ஒப்பந்தம்
3) கடப்பாடு
4) முன்மொழிவு

**18.** When the Consent of the Party is not free the Contract is

1) Void
2) Voidable
3) Illegal
4) Valid

இசைவு தம்மிச்சை இல்லா நிலையில், ஒப்பந்தமானது

1) இல்லா நிலையது
2) தவிர்தகுநிலை ஒப்பந்தம்
3) சட்ட முரணானது
4) செல்லத்தக்க ஒப்பந்தம்

**19.** According to ———————— International law is a positive morality.

1) John Austin
2) Starke
3) Holland
4) Francisco Victoria

"நாட்டிடைச் சட்டமானது நேர்ம ஒழுக்க நெறியாகும்", என்றவர்

1) ஜான் ஆஸ்டின்
2) ஸ்டார்க்
3) ஹாலன்ட்
4) பிரான்சிஸ்கோ விக்டோரியா

**20.** The legal maxin that has nexus with the law of contract

1) *res ipsa loquitur*
2) *irgnorentia juris non exquset*
3) *qui facit per alium facit per se*
4) *caveat emptor*

ஒப்பந்த சட்டத்துடன் தொடர்புடைய முதுமொழி

1) செயலே செப்பும், பொருளே புகும்
2) சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்க இயலாதது
3) பிறர்வழி செய்தலும் தானே செய்தமை
4) வாங்குபவரே விழித்திரு

**21.** Which of the following Doctrine of International law Means, "International Agreements are binding on good faith"?

1) Jus Cogens
2) Jus genitium
3) Pacta Sunt Servanta
4) Doctrine of Consensus

நாட்டிடையே ஒப்பந்தங்கள் நல்லெண்ணத்தில் அடிப்படையில் கட்டுப்படுத்தக்கூறியது என குறிக்கும் சொற்றொடர்?

1) மீறமுடியா விதி
2) நாடுகளுக்கிடையான சட்டம்
3) நல்லெண்ண ஒப்புணர்வு
4) கருத்தொருமை கோட்பாடு

**22.** The Latin maxim that has nexus as a defense in criminal law in excess with criminal law

1) Audi alteram partem
2) De minimis non curat lex
3) Ex pacto illicit non oritur action
4) Ignorantia juris non-excusat

குற்றவியல் வழக்கில் எதிர்வாதம் குறித்த ஒரு முதுமொழி

1) இருபுறம் கேட்டு நீதி வழங்குதல்
2) சட்டத்திற்கு இல்லை அற்பத்தில் அக்கறை
3) வெறும் வாக்குறுதியின் பேரில் வழக்குரிமை எழாது
4) சட்டம் பற்றிய அறியாமை மன்னிக்க இயலாது

**23.** Which one of the following is not a primary source of International Law?

1) Decision of International Court of Justice
2) International Treaty
3) International custom
4) General Principle of Law recognized by Civilized Nations

கீழ்க்கண்டவைகளில் நாட்டிடைச் சட்டத்தின் முதன்மையான மூலமாய் ஆகாதது

1) பன்னாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புரை
2) பன்னாட்டு ஒப்பந்தம்
3) பன்னாட்டு வழக்காறு
4) நாகரீகத்தில் சிறந்த நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகள்

**24.** The principle of Estoppel was upheld by ICJ in the case of

1) The nuclear Test Case
2) The Temple case (Cambodia Vs Thailand)
3) Right of Passage Case
4) Serbian Loan Case

பன்னாட்டு நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட முரண்தடை தொடர்பான வழக்கு?

1) அணுசோதனை
2) திருக்கோயில் வழக்கு
3) பாதை உரிமை வழக்கு
4) செர்பிய கடன் வழக்கு

**25.** There is no offence of adultery if it is committed with the consent of

1) The father of a married woman
2) Husband of a married woman
3) Married Woman
4) The Mother of a married woman

கீழ்க்கண்ட நபரின் சம்மதத்துடன் நிகழும் கள்ளத் தொடர்பு குற்றமாகவே கருதப்படுதல் ஆகாது?

1) திருமணமான நபரின் தந்தை
2) திருமணமான நபரின் கணவர்
3) மணமான பெண்
4) திருமணமான பெண்ணின் தாய்

26. The right of Private defence of property under Section 97 of IPC extends to the offence of

1) Criminal breach of trust
2) Theft and robbery
3) Cheating
4) Misappropriation

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 97–ன் கீழ் சொத்து தொடர்பான தற்காப்பு உரிமை இச்செயலுக்கு பொருந்தும்?

1) நம்பிக்கை மோசடி குற்றம்
2) திருட்டு மற்றும் கொள்கை
3) ஏமாற்றுதல்
4) கையாடல் செய்தல்

27. Private defence under IPC is based on the natural instinct of

1) Self respect
2) Self sufficiency
3) Self preservation
4) Self reliance

இந்திய தண்டனைச் சட்டத்தின் கண்டுள்ள தற்காப்புரிமையயானது இதன் தொடர்புடையது?

1) சுயமரியாதை
2) சுயதேவைகளை பூர்த்தி செய்தல்
3) சுய பாதுகாப்பு
4) சுய சார்புடைமை

28. Maximum limit of solitary confinement

1) One year
2) Three months
3) Two years
4) Six months

தனிமைச் சிறைக்கான உச்ச அளவு கோல்

1) ஒரு வருடம்
2) மூன்று மாதங்கள்
3) இரண்டு வருடங்கள்
4) ஆறு மாதங்கள்

29. Death under Section 46 of IPC denotes

1) Death of a human being
2) Death of an animal
3) Death of a human being and of an animal both
4) Death of either human being or an animal

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 46–ன் கீழ் வரையறை செய்யப்பட்ட மரணம் என்பது

1) ஒரு மனிதரின் மரணம்
2) ஒரு விலங்கின் மரணம்
3) மனித மற்றும் விலங்கின் மரணம்
4) மனித மரணமும் இல்லை விலங்கு மரணமும் இல்லை

30. Section 303 of the IPC was declared unconstitutional by the Supreme Court in

1) Mithu Vs State of Punjab
2) Sher Singh Vs State of Punjab
3) Bachan Singh Vs State of Punjab
4) Triveni Ben Vs State of Gujarat

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 303-ஐ உச்சநீதிமன்றம் ரத்து செய்த வழக்கு?

1) மித்து எதிர் பஞ்சாப் மாநிலம்
2) ஷெர்சிங் எதிர் பஞ்சாப் மாநிலம்
3) பச்சான் சிங் எதிர் பஞ்சாப் மாநிலம்
4) திரிவேணிபென் எதிர் குஜராத் மாநிலம்

**31.** Common intention means

1) Similar Intention
2) Same Intention
3) Sharing of Intention by all persons
4) Common plans

பொதுவான கருத்து என்பது

1) ஒத்த எண்ணம்
2) ஒரே மாதிரியான எண்ணம்
3) பகிரப்பட்ட கருத்து
4) பொதுவான திட்டம்

**32.** Muslim law not merely empower the husband to divorce his wife by talak, it also empower him to delegate this power to others

1) Single Talaq
2) Talaq-il-Tafweez
3) Talaq Hasan
4) Talaq ahason

முஹமதியார் சட்டப்படி ஒரு இஸ்லாமியர் தன் மனைவியை தாமோ அல்லது அவ்வதிகாரத்தை பிறர் மூலமோ செயல்படுத்த விழையும் செயல்

1) ஒரு முறை தலாக்
2) தலாக்–ல்–தப்வீஸ்
3) தலாக் ஹஸான்
4) தலாக் அஹஸான்

**33.** The Muslim Law which authorizes a wife to get divorce from her husband on proof of adulterous conduct?

1) Khula
2) Mubarrat
3) Ila
4) Lian

கள்ளத் தொடர்புக்காக தம் கணவரை விவாகரத்து செய்ய அவர் தம் மனைவிக்கு அதிகாரம் அளிக்கும் முஹமதியர் சட்டம்

1) குலா
2) முபாரத்
3) இலா
4) லியன்

**34.** "Mere Non-compliance with the decree of restitution of conjugal rights or a mere disinclination to agree to an offer of reunion did not amount to wrong disentitling the petitioner the relief". The Supreme Court decided in the case of

1) Saritha Vs Venkatasubbaiah
2) Birmal Devi D/o Bakhtawar singh Vs Singhraj son of Dasundhi Ram
3) Anupama Vs Singh Rao
4) Dharmandra Kumar Vs Usha Kumar

சேர்ந்து வாழும் உத்தரவை மீறும் நபர் தொடர்பான உச்சநீதிமன்ற வழக்கு

1) சரிதா
2) பிர்மல்தேவி
3) அனுபமா
4) தர்மேந்திர குமார்

35. In marriage, a sale of the daughter by the father to the Bridegroom practiced in the olden days was called

1) Gandhara Marriage
2) Daira form of Marriage
3) Rakshasa Marriage
4) Asura Marriage

தந்தை தன் மகளை திருமணம் செய்விக்கும் பொருட்டு மாப்பிள்ளைக்கு விற்பனை செய்வதாய் பாவித்த திருமண சடங்கு

1) கந்தர்வ திருமணம்
2) தைர்ரா வகை திருமணம்
3) ராக்ஷஸ வகை திருமணம்
4) அசுர வகை திருமணம்

36. Muslim marriage performed between parties having the capacity to complying with all the formalities to make it valid is called

1) Shahih
2) Basil
3) Fasid
4) Muta

முழு தகுதியுடைய முஹமதிய தம்பதியினரிடையே தேவையான சடங்குகளுடன் முடிவுற்ற ஒரு திருமணம் இவ்வாறு அழைக்கப்படும்

1) ஷாகி
2) பாஸில்
3) ஃபாஸிட்
4) முட்டா

37. The Peculiar feature of appointment of agents for performance of marriage is known as

1) Witalat-ba-nikah
2) Kharch-I-Pordan
3) Nikath
4) Nikah agents

முஹமதியார் சட்டத்தில் திருமணத்திற்காக ஒரு முகவரை நியமிப்பது இவ்வாறு அழைக்கப்படுகிறது

1) விட்டாலட் – பா – நிக்கா
2) கரச் – இ – பர்தான்
3) நிக்கா
4) நிக்கா முகவா

38. The term Industry as per Section 2(J) does not included

1) Trade
2) Systematic activity carried on by Co-operation between the Employers
3) Industrial Occupation
4) Domestic Service

தொழிற்சாலை சச்சரவுகளின் சட்டம் 2(J) படி தொழிற்சாலை அல்லாத ஒன்று

1) வியாபாரம்
2) பகிர்வு அடிப்படையிலான பணி
3) தொழிற்சாலை பணி
4) வீட்டு வேலை

39. The Triple test was accepted to define an Industry in the case of
1) Bangalore Water Supply Sewage Board Vs Rajappa
2) State of Bombay Vs Hospital Mazdoor Saba
3) Nagpur Corporation case
4) Physical Research Lab Vs K.H.Sharma

தொழிற்சாலை என்பதனை வரையறை செய்ய முப்பரிசோதனை கோட்பாட்டை அறிமுகம் செய்த உச்சநீதிமன்ற வழக்கு
1) ராஜப்பா (பெங்களூர்) வழக்கு
2) மஸ்தூர் சபா வழக்கு
3) நாக்பூர் கார்பரேஷன் வழக்கு
4) கே.எச்.சர்மா வழக்கு

40. The constitutional provision that has nexus with the latin maxim " nemo debet bis voxari"
1) 14 2) 20
3) 21 4) 32

ஒரே குற்றத்திற்கு எவரும் இருமுறை துன்புறுத்தப்படக் கூடாது எனும் முதுமொழிக்கு தொடர்புடைய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு
1) 14 2) 20
3) 21 4) 32

41. Section 27 of the Trade Union Act deals with ————— of Trade union.
1) Amalgamation 2) Registration
3) Dissolution 4) Cancellation

தொழிற் சங்கச் சட்டத்தின் பிரிவு 27-ல் தொடர்புடையது
1) ஒருங்கிணைத்தல் 2) பதிவு செய்தல்
3) கலைத்தல் 4) இரத்து செய்தல்

42. Court of Inquiry shall submit report of the appropriate Government with in a Period of
1) 14 days 2) 30 days
3) 6 months 4) 3 months

தொழில்துறை சச்சரவுகள் சட்டப்படி உண்மை உணர் நீதிமன்றம் தனது அறிக்கையினை அரசுக்கு சமர்பிக்க நிர்ணயம் செய்யப்பட்ட அதிகப்படியானகால அளவு
1) 14 நாட்கள் 2) 30 நாட்கள்
3) 6 மாதங்கள் 4) 3 மாதங்கள்

43. The verdict of the Labour court in Industrial Dispute is described as
1) Judgement 2) Decree
3) Award 4) Order

தொழிற்துறை சச்சரவுகள் சார்ந்த தொழிலாளர் நீதிமன்றத்தின் முடிவு ————— எனப்படும்
1) தீர்ப்புறை 2) தீர்ப்பாணை
3) தீர்ப்பு 4) உத்தரவு

44. The conduct that constitutes Nonfeasance
1) Intentionally harming another.
2) Failure to perform an act he or she is legally obliged to perform.
3) Committing fraud.
4) Committing trespass

செய்யாப் பிழையுடன் தொடர்புடையது
1) வேண்டுமென்றே மற்றவர்க்கு தீங்கிழைத்தல்
2) சட்டப்படி செய்யவேண்டிய கடப்பாடுகளை செய்ய தவறுகை
3) மோசடி செய்தல்
4) அத்துமீறிய நுழைவு

45. A tort is
1) A criminal wrong
2) A civil wrong other than a claim for breach of contract.
3) An action for breach of contract.
4) An action by an employee for workers' compensation.

தீங்கு என்பது
1) ஒரு குற்றவியல் தவறு
2) ஒப்பந்த மீறல் தவிர்த்த உரிமையியல் தகராறு
3) ஒப்பந்த மீறலுக்கு எதிரான வழக்கு
4) பணி இழப்புக்கான வழக்கு

46. 'Actionable per se' means
1) Actionable without proof of damage
2) Actionable only in the civil courts
3) A tort of strict liability
4) Actionable at the instance of the injured party only

இழப்பில்லா வழக்குரிமை என்பது
1) சேதம் நிருணம் இல்லா நிலை வழக்கிடுதல்
2) உரிமையியல் நீதிமன்றங்களில் தொடுக்கப்படும் வழக்கு
3) கடும் பொறுப்புநிலை சார்ந்த வழக்கு
4) பாதிக்கப்பட்டவர் சார்பாக தொடுக்கப்படும் வழக்கு

47. Medical examination of a woman to ascertain her virginity tantamount to infringement of her
1) Right to life
2) Right to livelihood
3) Right to marriage
4) Right to privacy

ஒரு பெண்ணின் கற்பினை பரிசோதிக்க அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும் செயல் அரசியல் சட்ட இவ்வுரிமைக்கு எதிரானது?
1) உயிர்வாழ் உரிமை
2) வாழ்வாதார உரிமை
3) திருமண உரிமை
4) தனிமைக்கான உரிமை

48. A batsman, hits a ball bowled towards him to the boundary for a six. The ball hits one of the pillars to the stand and veers off at an angle hitting a spectator in the face causing him to lose his sight. An action by him can be defended on the ground of

(i) Inevitable accident

(ii) Act of God

(iii) Contributory negligence

(iv) Volenti non fit injuria

1) (i) and (ii) 2) (ii) and (iii)

3) (i) and (iv) 4) (iii) and (iv)

கிரிக்கெட் விளையாட்டில் தன் பால் வீசப்பட்ட ஒரு பந்தினை எல்லைக் கோட்டினை தாண்டி அடிக்கும் நோக்கில் ஒரு விளையாட்டு வீரர் பந்தினை எதிர்கொள்கிறார். அப்பந்து ஸ்டேடியத்தின் ஒரு தூணின் மேல் பட்டு சரிந்து வீழ்கையில் ஒரு பார்வையாளரின் முகத்தை தாக்கியதில் அவர் தன் கண்பார்வையை இழக்கிறார். நஷ்ட ஈடு கோரி இவர் தொடுக்கும் வழக்கில் எதிர் வாதமாய் அமையக்கூடியது

(i) தவிர்க்க இயலா விபத்து

(ii) தெய்வச் செயல்

(iii) பங்களிப்பு கவனக்குறைவு

(iv) தாமே வலிய ஏற்றுக் கொண்ட ஊறு

1) (i) and (ii) 2) (ii) and (iii)

3) (i) and (iv) 4) (iii) and (iv)

49. Strict liability is liability without

1) remorse 2) discipline

3) fault 4) remedy

கடும் பொறுப்பு நிலை என்பது —————— பொறுப்புரிமை

1) வருந்துதல் அற்ற 2) ஒழுங்கற்ற

3) தவறில்லா 4) தீர்வற்ற

50. To succeed in a tort action the plaintiff must prove the case

1) To the best of his ability
2) Beyond reasonable doubt
3) On the balance of probabilities
4) To the satisfaction of the other party

தீங்கியல் வழக்கில் வாதி வெற்றி பெற இது இன்றியமையாதது

1) முடிந்தவரை நிரூபித்தல் வேண்டும்
2) சந்தேகமற நிரூபிக்கும் தன்மை
3) நம்பிக்கை தரும் வகையில் நிரூபித்தல்
4) எதிர் தரப்பினர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல்

ROUGH WORK